DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 569/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 3 P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோகுல கிருஷ்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 06.07.2026.

**எதிரி ஆஜர்/எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.10.2025 ம் தேதி மாலை 17.00 மணிக்கு நானும் என்னுடன் 1145 கோபிநாத் முதல் நிலை காவலர் மற்றும் 1147 மதுரைவீரன் முதல் நிலைகாவலர் ஆகிய இருவரும் பணி அலுவலாக உடுமலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில்ரோந்து அலுவலில் சென்றபோது கிடைத்த தகவலின் பேரில் 18.00 மணிக்கு கணபதி பாளையம் ரவிச்சந்திரன் தோட்டம் அருகே சென்றபோது அங்கு ஒரு நபர் 7 லிட்டர் பிடிக்கக்கூடிய மண்பானையில் தென்னைமரக்கள்ளை சட்டவிரோதமாக விற்பனைக்காக இருந்தவர் எங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரரித்த போது அவர் பெயர் கதிரேசன் த/பெ முத்துசாமி, காணியம்பாளையம் தற்சமயம் ராகல் பாவி உடுமலைப்பேட்டையில்இருப்பதாகவும் மண்பானையில் வைத்திருந்த 3 லிட்டர் கள்ளை அரசு அனுமதி இன்றி விற்பனைக்காக வைத்திந்ததை தானே முன்வந்து ஒப்புக்கொண்டு என்னிடம்

ஒப்படைத்ததை பெற்று 18.30 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தோம். பின்பு என்னுடன் வந்த காவலர் மூலம் கைப்ற்றுதல் மகசர் தயார் செய்து அவரிடம் கையெழுத்து பெற்றோம். 18.45 மணிக்கு மேற்படி 7 லிட்டர் பிடிக்கக்கூடிய மண்பானை மற்றும் 3 லி தென்னைமரக்கள்ளை உடன் வந்த காவலர் முன்னிலையில் அழித்தல் மகசர் தயார் செய்து அழிக்கப்பட்டும் பின்பு கதிரேசன் என்பவரை 19.15 மணிக்கு காவல் நிலையம் அ ழைத்து வந்து உடுமலை காவல் நிலைய குற்ற எண் 650/2025 ச/பி 4(1)(C) TNP Amendment Act 2024 கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் நகலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் மற்றமுதல் தகவல் அறிக்கையின் நகலை சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்பி வைத்தோம். ஒரு நகலை புலன் விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.3 எனகுறியீடு செய்யப்படுகிறது.** பின்பு முதல் நிலை காவலர்கள் கோபிநாத் மற்றும் மதுரை வீரன் ஆகிய சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்று எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.ரவிச்சந்திரன் தோட்டத்தில் பிடித்ததாக சொல்லப்பட்ட இடம் வழித்தடமா அல்லது தோட்டமா என்றால் தோட்டத்திற்கு செல்லக்கூடிய மண்பாதை. அங்கு வாகனம் செல்லும் என்றால் ஆமாம். பொதுசனசாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான்.

2.கைப்பற்றப்பட்ட கள்ளை ஆய்விற்கு உட்படுத்தினீர்களா என்றால் இல்லை. கள் என்பதை எப்படி உறுதி செய்தீர்கள் என்றால் வாசனை வைத்து உறுதி செய்தேன். தெலுவிலும் கள்ளின் வாசம் வரும் என்றால் இல்லை. இரண்டும் வேறு வேறு வாசனை வரும். கள்ளை இறக்கி மரத்தின் அடியிலேயே விற்பனை செய்தார்களா என்றால் கொஞ்சம் தள்ளி மண்பாதையில் செய்தார்கள்.

3. சொன்னபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. அதன் காரணமாக தான் நீங்கள் பொதுசன சாட்சிகள் யாரையும் சேர்க்கவில்லை என்றால் அந்த இடத்தில் பொதுசன சாட்சிகள் யாரும் இல்லாததால் உடனிருந்த காவலர்களை சாட்சியாக போட்டேன். மரத்தில் சட்டி இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அதனை கைப்பற்றினீர்களா என்றால் இல்லை அது வெறும் பானை. பானையை ஏன் உடைத்தீர்கள் என்றால் எப்பொழுதும் கள் பானை இரண்டையும் அழிப்போம். வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala . B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.